## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி

## அ.வ.எண்.86/2018

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2025 ஆண்டு ஜனவரி மாதம் 21 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ஈஸ்வரி (எ) தேவி | மதம் | : இந்து |
| க/பெ | : கருணாகரன் | ஜாதி | : -- |
| வயது | : 54 | கிராமம் | : காவனூர் |
| தொழில் | : கூலி | வட்டம் | : அரக்கோணம் |

**21.01.2025**

**<u>பி.வா.சா. 1 திரும்ப அழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

9. 1991ல் வாதி வழக்கு சொத்தை கிரையம் வாங்கிய விவரமும் 1996ல் வாதி வழக்கு சொத்தில் வீடு கட்டிய விவரமும் என் அப்பா அரசனுக்கு தெரியும் என்றால் இல்லை. தெரியாது. நானும் என் கணவரும் என் அப்பா வீட்டிற்கு அடிக்கடி வந்துபோய் கொண்டு இருப்போம் என்றாலும் அதனால் வாதி 1996ல் வீடு கட்டிய விவரம் எங்களுக்கும் தெரியும் என்றால் இல்லை. எனக்கும் என் கணவருக்கும் மேற்படி விவரங்கள் தெரிந்தும் நாங்கள் மறுப்பு தெரிவிக்கவில்லை என்றால் எங்களுக்கு அந்த விவரமே தெரியாது. 1996ல் வாதி வீடு கட்டிய பின்பு என் அப்பா இறந்த காலம் வரை அந்த 3 வருடமும் என் அப்பா எந்த ஆட்சேபணையும் செய்யவில்லை என்றால் என் அப்பாவிற்கு தெரியாது. எங்களுக்கு வீடு கட்டிய விவரம் தெரியாது. அவர்கள் வீடே கட்டவில்லை.

10. நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் வீடு கட்டிய விவரம் எங்களுக்கு தெரியும் என்றாலும் எங்களுக்கு தெரியாது. அங்கு வீடே இல்லை. நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் 1996லேயே வாதி அங்கு வீடு கட்டிவிட்டார் என்றாலும் சரியல்ல. பெரியப்பன், குப்பன் ஆகியோர் தாவா சொத்திற்கு உரிமையுள்ளவர்களிடம் இருந்துதான் சொத்தை வாங்கியுள்ளார்கள் என்றால் அது என் அப்பா சொத்து. அவர்கள் எப்படி கிரையம் கொடுக்க முடியும். உரிமையாளர்களிடம் இருந்து அவர்கள் கிரையம் வாங்கிய விவரம் தெரிந்துதான் நானும் என் அப்பாவும் எந்த

ஆட்சேபணையும் செய்யவில்லை என்றால் அது எங்கள் சொத்து.

11. தாவா சொத்து புல எண்.138/6 ல் 57 செண்ட் தோட்டி சாமைய்யா என்ற வடக்கைய்யாவிற்கு பாத்தியம் என்றாலும் 2016 வரை தோட்டி சாமைய்யா என்ற வடக்கைய்யா பெயரில்தான் பட்டா எண்.885 பட்டா, சிட்டா, வருவாய் ஆவணங்கள் அனைத்தும் உள்ளது என்றாலும் 1954 க்கு முன்பிருந்தே என் அப்பா பெயரில்தான் உள்ளது. எந்த வருடத்தில் பட்டா என் பெயரிருக்கு என் அம்மா பெயருக்கு பட்டா மாற்றினோம் என்றால் 2017 ல் மாற்றினோம். உரிய ஆவணங்கள் கொடுத்து பட்டா மாற்றியதாக நான் சொல்வதில் என் அப்பாவின் இறப்பு சான்றிதழ், வாரிசு சான்றிதழ் வைத்துள்ளோமா என்றால் வைத்துள்ளோம்.

12. 1954 க்கு முன்பிருந்தே என் அப்பா பெயரில்தான் பட்டா இருந்ததாக நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் 2016 வரை என் தாத்தா தோட்டி சாமைய்யா என்ற வடக்கைய்யா பெயரில்தான் வா.சா.ஆ 8 ன் படி இருந்துள்ளது என்றாலும் 2016 ல்தான் என் பெயருக்கும் என் தாயார் பெயருக்கும் பட்டா மாற்றியுள்ளோம் என்றாலும் சரியல்ல. என் அப்பா பெயரில்தான் இருந்தது. 1954 க்கு முன்பு என் அப்பா பெயரில்தான் பட்டா இருந்தது என்பதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளோமா என்றால் தாக்கல் செய்துள்ளோம். நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் 2016 ல்தான் நாங்கள் பட்டா மற்றியுள்ளோம் என்பதற்காகதான் வா.சா.ஆ 8 ஆவணம் வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் அது என் அப்பா சொத்துதான்.

13. என் தாத்தா தோட்டி சாமைய்யா என்ற வடக்கைய்யாவிற்கு நானும் என் அம்மாவும் நேரடி வாரிசு இல்லை என்றால் என் அப்பா நேரடி வாரிசு ஆவார். அதனால்தான் என் அப்பா பெயருக்கு பட்டா வந்து பின்பு எங்கள் பெயருக்கு பட்டா வந்தது. நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் கூட்டு பட்டாவாக இருந்த 57 செண்ட் நிலத்திற்கு என் தாத்தா தோட்டி சாமைய்யா என்ற வடக்கைய்யாவிற்கு நேரடி வாரிசு இல்லாத எனக்கும் என் தாயாருக்கும் வந்த பட்டா வாதிகளை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல.

14. வாதிக்கு தாவா சொத்தில் உள்ள வீட்டை தவிர வேறு வீடே இல்லை என்றால் அவர்கள் இடத்தில் வீடு உள்ளது. நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் வாதிக்கு தாவா சொத்தில் உள்ள வீட்டை தவிர வேறு வீடே இல்லை என்றாலும் அதை நிரூபிக்க வாதி வீட்டு வரி ரசீதுகளை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்

என்றாலும் சரியல்ல. வாதிக்கு வேறு வீடு எந்த இடத்தில் உள்ளது என்றால் பெரிய தெருவில் உள்ளது. அதை எங்கள் நிலத்தில் இருப்பது போல் பட்டா வாங்கி வரி கொடுத்துள்ளார்.

15. எனக்கு தற்போது என்ன வயது என்றால் 54 ஆகும். எனக்கு 54 வயதாகும் நிலையில் நானும் என் தாயாரும் 80 வருடங்களாக வழக்கு சொத்தை அனுபவித்ததாக பொய்யாக சொல்கிறோம் என்றால் என் அப்பா சொன்னதைதான் சொல்கிறேன். தாவா சொத்து உண்மையிலேயே என் அப்பா சொத்தாக இருந்திருந்தால் வாதியை வழக்கு சொத்தில் காலிசெய்து சுவாதீனம் கொடுக்க கோரி வழக்கு தாக்கல் செய்திருப்பேன் என்றால் அங்கு வீடே இல்லை. எனக்கு வழக்கு பற்றியெல்லாம் தெரியவில்லை. நான் தாவா சொத்தில் வீடே இல்லை என்று சொல்கிறேனா என்றால் ஆமாம்.

16. நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் வாதி வழக்கு சொத்தில் வீடு கட்டிய பின்பு என் பெயரில் உள்ள பொய்யான பட்டாவை வைத்துகொண்டு வாதியை மிரட்டியதால் வாதி இந்த வழக்கை தாக்கல் செய்தார் என்றால் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள பட்டா எண்.2035 க்கான பட்டா வாதி தரப்பினராக சேர்க்கப்படாத தீர்ப்பு, தீர்ப்பாணை எனது எதிர்வழக்குரையில் குறிப்பிடாத வரி ரசீதுகள் அனைத்தும் வாதியை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. வாதி கூட்டு உரிமையாளர்களில் ஒருவரான துரைராஜ் என்பவரிடமிருந்து பெற்ற கிரையம் சட்டப்படி செல்லத்தக்கது என்றால் சரியல்ல.

17. எனது பட்டா எண் சொல்ல முடியுமா என்றால் என் அப்பா பெயரில் இருந்த பழைய பட்டா எண்.201 ஆகும். தற்போது என் பெயரில் உள்ள பட்டா எண்.2035 ஆகும். வாதி கோரியப்படி தீர்ப்பு செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

(மறு விசாரணை இல்லை)